සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

60 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය I, II
வணிகக் கல்வியும் கணக்கீடும் I, II
Business and Accounting Studies I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

## வணிகக் கல்வியும் கணக்கீடும் I

**கவனிக்க :**
(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, பின்பற்றுக.

● பின்வரும் சம்பவத்தை அவதானித்து **1** தொடக்கம் **5** வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

சக்தி என்பவர் 'சக்தி கென்ஸ்றக்சன்ஸ்' எனும் வீடுகளைக் கட்டி வழங்குவது தொடர்பிலான வணிகமொன்றை நடாத்துகின்றார். அத்துடன் 2016 ஆம் ஆண்டிற்கான சிறந்த கட்டுமானம் செய்பவருக்கான விருதினையும் பெற்றுள்ளார். சக்தி, தனது கட்டுமானங்களுக்காக தன்னால் உற்பத்திசெய்யப்பட்ட செங்கற்களை மட்டுமே பயன்படுத்துகின்றார்.

**1.** இச்சம்பவத்தில் குறிப்பிடப்படும் 'சக்தி கென்ஸ்றக்சன்ஸ்' வணிகத்தினால் பூர்த்திசெய்யப்படுகின்ற அடிப்படை மனிதத் தேவை யாது ?
(1) உணவு (2) உடை (3) இருப்பிடம் (4) கல்வி

**2.** இச்சம்பவத்தில் குறிப்பிடப்படும் 'சக்தி கென்ஸ்றக்சன்ஸ்' வணிகம் எந்த வணிக நிறுவன வகைக்கு உரித்தானது?
(1) தனியுடைமை (2) பங்குடைமை
(3) கூட்டிணைக்கப்பட்ட கம்பனி (4) சங்கம்

**3.** 'சக்தி கென்ஸ்றக்சன்ஸ்' இனால் பயன்படுத்தப்படும் செங்கற்கள் எந்த உற்பத்திக் காரணிக்கு உரித்தாகும்?
(1) நிலம் (2) உழைப்பு (3) மூலதனம் (4) முயற்சியாண்மை

**4.** இச்சம்பவத்தில் குறிப்பிடப்படும் 'சக்தி கென்ஸ்றக்சன்ஸ்' வணிகம் தொடர்பிலான சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) இவ்வணிகத்தின் பெயரைப் பதிவுசெய்வது கட்டாயமானதல்ல.
(2) இவ்வணிகத்தினால் பயன்படுத்தப்படும் செங்கற்களுக்கான கிரயம் ஒரு நேர் உற்பத்திக் கிரயமாகும்.
(3) இவ்வணிகமானது சட்ட ஆளுமை உடையதாகும்.
(4) இவ்வணிகத்தின் மீதான சக்தியின் நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்டதாகும்.

**5.** வீடுகளின் கட்டுமானத்துக்கு சக்தியினால் உற்பத்தி செய்யப்பட்ட செங்கற்கள் வழங்கப்பட்டதானது எந்த முகாமைத்துவக் கருமத்திற்கு உரித்தானதாகும்?
(1) திட்டமிடல் (2) ஒழுங்கமைத்தல் (3) தலைமை வகித்தல் (4) கட்டுப்படுத்தல்

**6.** பின்வருவன வணிக நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட வகையில் அக்கறையுடைய தரப்பினர் அடைந்து கொள்வதற்கான சில இலக்குகள் ஆகும்.
A - நியாயமான சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளல்
B - வரிவிதிப்பு
C - தொடர்ச்சியாகக் கட்டளைகளைப் பெற்றுக்கொள்ளல்

மேலே தரப்பட்ட A, B, C ஆகிய இலக்குகளை அடைந்து கொள்வதற்கு அக்கறை செலுத்தும் தரப்பினரைச் சரியான ஒழுங்குவரிசையில் எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
(1) ஊழியர்கள், அரசாங்கம், வழங்குநர்கள் (2) ஊழியர்கள், உடைமையாளர்கள், வழங்குநர்கள்
(3) ஊழியர்கள், நிதி நிறுவனங்கள், போட்டியாளர்கள் (4) முகாமையாளர்கள், அரசாங்கம், உடைமையாளர்கள்

**7.** உடைமையாளர் ஒருவர் வணிக முகாமைத்துவம் தொடர்பில் பட்ட மேற்படிப்பைப் பூர்த்திசெய்வதானது அவரது வணிகத்திற்கு
(1) ஒரு பலமாகும். (2) ஒரு பலவீனமாகும். (3) ஒரு வாய்ப்பாகும். (4) ஓர் அச்சுறுத்தலாகும்.

[பக். 2 ஐப் பார்க்க
Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

**8.** காசோலையொன்றில் காணப்படும் காந்தமைத் தன்மை கொண்ட பட்டியொன்று கீழே தரப்பட்டுள்ளது.

| ⑈015129⑈ | 7010⑉ | 055⑆ | 0002323980⑈ |
|---|---|---|---|
| A | B | C | D |

மேலே தரப்பட்ட பட்டியில் **A, C** ஆகிய எழுத்துகளினால் குறிப்பிடப்படும் இலக்கங்களின் மூலம் ஒழுங்குவரிசையில் எடுத்துக்காட்டப்படுவன,

(1) கணக்கு இலக்கம், வங்கிக் கிளை இலக்கம்
(2) வங்கி இலக்கம், கணக்கு இலக்கம்
(3) காசோலை இலக்கம், வங்கிக் கிளை இலக்கம்
(4) காசோலை இலக்கம், வங்கி இலக்கம்

**9.** கோபாலன் என்பவருடைய பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட குறுக்குக் கோடிட்ட காசோலையொன்று மக்கள் வங்கி, காலி கிளையில் உள்ள அவரது நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்வதற்காகச் சமர்ப்பிக்கப்பட்டபோது வங்கி அதிகாரியால் மறுக்கப்பட்டது.

அக்காசோலையில் குறிப்பிடப்பட்டுள்ள குறுக்குக் கோடு யாது ?

(1) கைமாற்றத்தகாதது
(2) பணம் பெறுபவர் கணக்கு மட்டும்
(3) மக்கள் வங்கி - காலி
(4) இலங்கை வங்கி - காலி

**10.** சந்திரன் என்பவர் ரூ. 1 000 000 பெறுமதியான தனது மோட்டார் வாகனத்தை அதே பெறுமதியில் காப்புறுதி செய்துகொண்டார். மோட்டார் வாகனம் விபத்துக்குள்ளானதில் ரூ. 400 000 பெறுமதியான சேதம் ஏற்பட்டது. சந்திரன் காப்புறுதிக் கம்பனியிடமிருந்து ரூ. 1 000 000 ஐ சேதத்திற்கான நட்டஈடாகக் கோரினார். காப்புறுதிக் கம்பனியிடமிருந்து சந்திரனுக்கு எவ்வளவு தொகை நட்டஈடாகக் கிடைக்கும்?

(1) ரூ. 400 000
(2) ரூ. 600 000
(3) ரூ. 1 000 000
(4) ரூ. 1 400 000

**11.** மின் அஞ்சல் (e-mail) ஒரு
(1) உள்வாரி, இலத்திரனியல், வாய்மொழிமூலமான தொடர்பாடல் முறையாகும்.
(2) வெளிவாரி, இலத்திரனியல், வாய்மொழிமூலமான தொடர்பாடல் முறையாகும்.
(3) வெளிவாரி, இலத்திரனியல், சைகை மூலமான தொடர்பாடல் முறையாகும்.
(4) வெளிவாரி, இலத்திரனியல், எழுத்துமூலமான தொடர்பாடல் முறையாகும்.

**12.** கொழும்புத் துறைமுகமானது போக்குவரத்து அடிப்படை மூலக்கூறின் .......①....... ஆகக் கருதப்படும் அதேவேளை கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துசேர்ந்த நெவெஸ்கா லேடி (Neveska Lady) எனும் கப்பலானது போக்குவரத்து அடிப்படை மூலக்கூறின் .......②....... ஆகக் கருதப்படும்.

மேலே தரப்பட்ட கூற்றில் ①, ② ஆகிய இடைவெளிகளில் இடம்பெறக்கூடிய சரியான சொற்களை ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

(1) ஊடகம், தரிப்பிடம்
(2) தரிப்பிடம், ஊடகம்
(3) தரிப்பிடம், வலு
(4) வழி, ஊடகம்

**13.** பின்வருவனவற்றுள் மொத்த வியாபார நடவடிக்கை எது ?
(1) உடவளவை யானைகள் சரணாலயத்தில் உள்ள யானைகளுக்கு வழங்குவதற்காக பால் சாலை ஒன்றினால் 100 பால் பைக்கற்றுகள் விற்கப்படுதல்
(2) புகையிரதத்திலுள்ள பிரயாணிகளுக்கு ராதா என்பவரால் நிலக்கடலை விற்கப்படுதல்
(3) பார்த்தீபன் என்பவரின் வீட்டுக் கூரைக்குப் போடுவதற்காக ஓட்டுத் தொழிற்சாலை ஒன்றினால் 1 000 ஓடுகள் விற்கப்படுதல்
(4) கொழும்பிலுள்ள பூக் கடைகளுக்கு மலித் என்பவரால் சிறிய அளவுகளில் பூக்கள் விற்கப்படுதல்

**14.** பின்வருவனவற்றுள் இருந்து முகாமைத்துவம் தொடர்பில் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) முகாமையாளர்களால், ஊழியர்கள் அவர்களது கடமைகளைச் செய்வதற்காக தகவலளித்தலும் நெறிப்படுத்தலும் ஒழுங்கமைத்தல் எனப்படும்.
(2) நிறுவனமொன்றின் நோக்கங்களைத் தீர்மானித்தலும் அவற்றை அடைவதற்கான வழிமுறைகளை வடிவமைத்தலும் திட்டமிடல் எனப்படும்.
(3) திட்டமிடப்பட்ட நோக்கங்களை அமுல்படுத்துவதற்கு நிறுவனத்துக்குள்ளே மனித வளங்களை ஒழுங்குமுறையில் நெறிப்படுத்துதல் கட்டுப்படுத்தல் எனப்படும்.
(4) திட்டமிடப்பட்டவாறு மிகவும் தரமான உற்பத்திப்பொருள்கள் உற்பத்திசெய்யப்பட்டனவா என்பதனை நுண்ணாய்வுசெய்தல் தலைமைவகித்தல் எனப்படும்.

[பக். 3 ஐப் பார்க்க
Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

15. கீழே தரப்படும் **X** மற்றும் **Y** நிரல்களில் முறையே சில வணிகங்களும் இலக்கு நுகர்வோர் குழுக்களும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 1. சுவசெவன வைத்தியசாலை | A - பாடசாலைச் சிறுவர் |
| 2. ஹரிதா விடுமுறை விடுதி | B - வாசிப்போர் |
| 3. திமுது பாடசாலைச் சீருடை வழங்குநர் | C - நோயாளிகள் |
| 4. பொது நூலகம் | D - சுற்றுலாப் பயணிகள் |

மேலே தரப்பட்டுள்ள **X** நிரலிலுள்ள வணிகங்களுடன் **Y** நிரலிலுள்ள இலக்கு நுகர்வோர் குழுக்கள் பொருந்தக்கூடிய வகையில் சரியான ஒழுங்குமுறையில் காணப்படும் விடை
(1) A, C, B, D (2) B, C, D, A (3) C, B, A, D (4) C, D, A, B

16. சாதாரண பங்குகளில் முதலீடு செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் ஒரு திரும்பல் **அல்லாதது**
(1) பங்கிலாப வருமானம் (2) வட்டி வருமானம்
(3) வாக்குரிமைகள் (4) மூலதன ஆதாயங்கள்

17. வணிகமொன்றில் நிகழ்ந்த கொடுக்கல்வாங்கலொன்று வருமாறு:
* ரூ. 50 000 பெறுமதியான பொருள்கள் காசுக்குக் கொள்வனவு செய்யப்படல்

வணிகத்தில் இக்கொடுக்கல்வாங்கல் நிகழ்ந்ததன் மூலம்,
(1) சொத்துக்களில் மட்டும் மாற்றம் ஏற்படும்.
(2) பொறுப்புக்களில் மட்டும் மாற்றம் ஏற்படும்.
(3) சொத்துக்கள், பொறுப்புக்களில் மட்டும் மாற்றம் ஏற்படும்.
(4) சொத்துக்கள், பொறுப்புக்கள், உரிமையாண்மை ஆகிய எல்லாவற்றிலும் மாற்றம் ஏற்படும்.

18. பின்வருவனவற்றுள் உரிமையாண்மையில் தாக்கத்தை **ஏற்படுத்தாத** கொடுக்கல்வாங்கலைத் தெரிவுசெய்க.
(1) காசாகச் செலுத்திய இறைக் கட்டணம் ரூ. 400
(2) காசாகப் பெற்ற மேலதிக வருமானம் ரூ. 500
(3) உடைமையாளர் தனது சொந்தப் பணத்திலிருந்து கடன்கொடுத்தோருக்குச் செலுத்திய தொகை ரூ. 5 000
(4) செலுத்த வேண்டியிருந்த மின்சாரக் கட்டணங்கள் காசாகச் செலுத்தியது ரூ. 2 000

● பின்வரும் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு **19** ஆம், **20** ஆம் வினாக்களுக்கு விடை தருக.
* திலகன் வணிகமானது ரூ. 20 000 கிரயமான பொருள்களை கடனுக்குக் கொள்வனவு செய்தது. அதன்போது 10% வியாபாரக் கழிவு கழிக்கப்பட்டது. பின்னர் பணம் செலுத்தியபோது 10% காசுக் கழிவும் பெற்றுக்கொள்ளப்பட்டது.

19. மேலே தரப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை திலகன் வணிகத்தின் கணக்கீட்டுச் சமன்பாட்டின் கீழ் பதிவுசெய்யும்போது சொத்துக்களின் மீது ஏற்படக்கூடிய தேறிய தாக்கம்
(1) ரூ. 1 800 ஆல் குறைவடைதல் (2) ரூ. 1 800 ஆல் அதிகரித்தல்
(3) ரூ. 18 000 ஆல் குறைவடைதல் (4) ரூ. 20 000 ஆல் அதிகரித்தல்

20. திலகன் வணிகத்தின் காசுக் கொடுப்பனவு தொடர்பிலான சரியான இரட்டைப் பதிவு யாது?
(1) கடன்கொடுத்தோர் கணக்கு வரவு ரூ. 18 000
காசுக் கணக்கு செலவு ரூ. 18 000
(2) கடன்கொடுத்தோர் கணக்கு வரவு ரூ. 20 000
காசுக் கணக்கு செலவு ரூ. 20 000
(3) கடன்கொடுத்தோர் கணக்கு வரவு ரூ. 18 000
காசுக் கணக்கு செலவு ரூ. 16 200
பெற்ற கழிவுகள் கணக்கு செலவு ரூ. 1 800
(4) கடன்கொடுத்தோர் கணக்கு வரவு ரூ. 20 000
காசுக் கணக்கு செலவு ரூ. 18 000
பெற்ற கழிவுகள் கணக்கு செலவு ரூ. 2 000

21. வணிகமொன்றின் பேரேட்டில் விற்பனைக் கணக்கானது ........①........ கணக்காகக் காணப்படும் அதேவேளை பற்றுக் கணக்கானது ........②........ கணக்காகக் காணப்படும்.

மேலே தரப்பட்ட கூற்றில் ①, ② ஆகிய இடைவெளிகளில் இடம்பெறக்கூடிய சரியான சொற்களை ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
(1) வருமானம், உரிமையாண்மை (2) வருமானம், செலவினம்
(3) பொறுப்பு, உரிமையாண்மை (4) உரிமையாண்மை, செலவினம்

22. பின்வருவனவற்றுள் பொதுப் பேரேட்டில் பதியப்பட வேண்டிய கொடுக்கல்வாங்கலைத் தெரிவுசெய்க.
(1) சொந்தத் தேவைக்காக உடைமையாளரால் ரூ. 2 000 காசு எடுக்கப்படுதல்
(2) கடன்பட்டோரிடமிருந்து வரவேண்டிய தொகை ரூ. 2 000 அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிக்கப்படுதல்
(3) வணிகப் பயன்பாட்டுக்காக ரூ. 100 000 பெறுமதியான இயந்திரமொன்று காசுக்குக் கொள்வனவு செய்யப்படுதல்
(4) வணிகத்துக்காக ரூ. 10 000 பெறுமதியான பொருள்கள் கடனுக்குக் கொள்வனவு செய்யப்படுதல்


Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

26331

● பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **23** ஆம், **24** ஆம் வினாக்களுக்கு விடை தருக.

※ 30 செப்ரெம்பர் 2017 இல் வங்கிக் கணக்கு மீதியானது ரூ. 14 100 ஆகும். பின்வரும் காரணங்களினால் வங்கிக் கூற்று மீதி இத்திகதியில் வித்தியாசமாகக் காணப்பட்டது.

A - வைப்புச் செய்யப்பட்டபோதும் வசூலிக்கப்படாத காசோலைகள் ரூ. 8 000 ஆகும்.

B - கடன்பட்டோரிடமிருந்து நேரடியாகப் பெற்றுக்கொண்டவை ரூ. 2 500 ஆகும்.

C - நிலையான கட்டளைகள் மீதான காப்புறுதிக் கொடுப்பனவுகள் ரூ. 3 500 ஆகும்.

**23.** மேலே தரப்பட்டவற்றுள் வங்கிக் கணக்கு மீதியானது வங்கிக் கூற்று மீதியை விட அதிகமாகக் காணப்பட்டமைக்குக் காரணமானது/காரணமானவை

(1) A மட்டும் (2) B மட்டும் (3) A யும் C யும் மட்டும் (4) B யும் C யும் மட்டும்

**24.** 30 செப்ரெம்பர் 2017 இல் சீராக்கிய வங்கி மீதி

(1) ரூ. 5 100 (2) ரூ. 10 600 (3) ரூ. 13 100 (4) ரூ. 16 600

**25.** சரளா வணிகத்தின் சில்லறைக் காசேட்டுக் கட்டுநிதியின் பெறுமதி ரூ. 3 000 ஆகும். 2017 செப்ரெம்பர் மாதத்துக்கான சில்லறைக் காசேட்டு செலவுகள் ரூ. 2 800 ஆகக் காணப்பட்டது. ஒக்ரோபர் 1ஆம் திகதி ரூ. 3 300 மீள நிரப்பப்பட்டது. சரளா வணிகத்தின் சில்லறைக் காசேடு தொடர்பிலான சரியான கூற்றைத் தெரிவுசெய்க.

(1) ஒக்ரோபர் மாதத்துக்கான சில்லறைக் காசேட்டுக் கட்டுநிதியின் பெறுமதி ரூ. 3 500 ஆகும்.
(2) செப்ரெம்பர் 30 இல் சில்லறைக் காசாளனிடம் இருந்த தொகை ரூ. 500 ஆகும்.
(3) செப்ரெம்பர் மாதத்துக்கான சில்லறைக் காசேட்டுச் செலவுகள் ரூ. 3 300 ஆகும்.
(4) ஒக்ரோபர் மாதத்திலிருந்து சில்லறைக் காசேட்டு நிதி அதிகரித்த தொகை ரூ. 300 ஆகும்.

**26.** கொள்வனவு நாளேடு ஒரு

(1) பேரேட்டு கணக்கு ஆகும். (2) முதன்மைப் பதிவேடு ஆகும்.
(3) மூல ஆவணம் ஆகும். (4) நிதிக்கூற்று ஆகும்.

**27.** சுகி என்பவள் தனது வணிகத்தினால் தயாரிக்கப்பட்ட 10 தயிர்ச் சட்டிகளைத் தனது குடும்ப நிகழ்வொன்றுக்காக எடுத்துக்கொண்டாள். இது

(1) கொள்வனவுகள் நாளேட்டில் பதியப்படும். (2) விற்பனைகள் நாளேட்டில் பதியப்படும்.
(3) பொது நாட்குறிப்பில் பதியப்படும். (4) கொள்வனவுகள் கணக்கில் பதியப்படும்.

● பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **28** ஆம், **29** ஆம் வினாக்களுக்கு விடை தருக.

※ வணிகமொன்று கடன்பட்டோருக்கு அனுமதித்த கழிவான ரூ. 1 200 ஐப் பதிவுசெய்வதற்காக மேற்கொண்ட நாட்குறிப்புப் பதிவு வருமாறு:

| | | |
|---|---|---|
| கொடுத்த கழிவு கணக்கு | வரவு | ரூ. 2 100 |
| கடன்பட்டோர் கணக்கு | செலவு | ரூ. 2 100 |

**28.** மேற்குறித்த பதிவினால்,

(1) பரீட்சை மீதியின் வரவு மற்றும் செலவு நிரல்களின் மொத்தம் சமமின்றிக் காணப்படும்.
(2) தொங்கற் கணக்கில் ரூ. 900 வரவு மீதி ஏற்படும்.
(3) பொருத்தமான கணக்குகளில் கொடுத்த கழிவுகள் ரூ. 900 மேலதிகமாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
(4) பொருத்தமான கணக்குகளின் பிழையான பக்கங்களில் கொடுத்த கழிவுகள் ரூ. 900 மேலதிகமாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**29.** மேலே தரப்பட்ட தவறைத் திருத்துவதற்கான இரட்டைப் பதிவு

(1) கடன்பட்டோர் கணக்கு வரவு ரூ. 900
கொடுத்த கழிவுகள் கணக்கு செலவு ரூ. 900

(2) கொடுத்த கழிவுகள் கணக்கு வரவு ரூ. 900
கடன்பட்டோர் கணக்கு செலவு ரூ. 900

(3) கொடுத்த கழிவுகள் கணக்கு வரவு ரூ. 1 200
கடன்பட்டோர் கணக்கு செலவு ரூ. 1 200

(4) கடன்பட்டோர் கணக்கு வரவு ரூ. 2 100
கொடுத்த கழிவுகள் கணக்கு செலவு ரூ. 2 100

**30.** 01.01.2016 இல் சுபயான் விளையாட்டுக் கழகத்தின் அங்கத்தவர் எண்ணிக்கை 200 ஆக இருந்தது. ஓர் அங்கத்தவருக்கான மாதாந்த அங்கத்துவக் கட்டணம் ரூ. 50 ஆகும். 2016 ஆம் ஆண்டிற்காக 30 அங்கத்தவர்கள் தமது அங்கத்துவக் கட்டணத்தைச் செலுத்தவில்லை.

மேலே தரப்பட்ட விளையாட்டுக் கழகம் தொடர்பில் **பிழையான** கூற்றைத் தெரிவுசெய்க.

(1) 2016 ஆம் ஆண்டுக்கான வருமானச் செலவுகள் கணக்கில் குறிப்பிடப்படும் அங்கத்துவக் கட்டண வருமானம் ரூ. 120 000 ஆகும்.
(2) 2016 ஆம் ஆண்டுக்கான பெறுவனவுகள், கொடுப்பனவுகள் கணக்கில் குறிப்பிடப்படும் அங்கத்துவக் கட்டணம் ரூ. 102 000 ஆகும்.
(3) மாதாந்த அங்கத்துவக் கட்டண வருமானம் ரூ. 10 000 ஆகும்.
(4) 2016 ஆம் ஆண்டுக்கான பெற வேண்டிய அங்கத்துவக் கட்டணம் ரூ. 1 500 ஆகும்.

[பக். 5 ஐப் பார்க்க

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

**31.** பின்வரும் இடைவெளிக்கான சரியான விடையைத் தெரிவுசெய்க.

| நேர் மூலப்பொருள் கிரயம் | + | நேர் ஊழியக் கிரயம் | + | ஏனைய நேர்க் கிரயம் | + | ......... | = | மொத்த உற்பத்திக் கிரயம் |
|---|---|---|---|---|---|---|---|---|

(1) மூலக் கிரயம்
(2) உற்பத்தி மேந்தலைக் கிரயம்
(3) அலகுக்கான உற்பத்திக் கிரயம்
(4) இலாப எல்லை

**32.** செங்கற்களை உற்பத்தி செய்யும் வணிகமொன்றினால் களிமண் கொள்வனவுக்காகச் செலவு செய்யப்பட்ட ரூ. 8 000 அவ்வணிகத்தின்,
(1) மூலக் கிரயத்தின் ஒரு பகுதியாகும்.
(2) உற்பத்தி மேந்தலையின் ஒரு பகுதியாகும்.
(3) மறைமுக கிரயத்தின் ஒரு பகுதியாகும்.
(4) மறைமுக மூலப்பொருள் கிரயத்தின் ஒரு பகுதியாகும்.

**33.** 01.01.2015 இல் இயந்திரமொன்று ரூ. 600 000 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டது. இந்த இயந்திரத்தின் பயனுள்ள ஆயுட்காலம் 5 வருடங்களாகும். இயந்திரத்தின் ஆயுட்கால இறுதியில் காணப்படும் எஞ்சிய பெறுமதி ரூ. 100 000 ஆகும். 31.12.2016 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட வேண்டிய திரண்ட பெறுமானத் தேய்வு எவ்வளவு?
(1) ரூ. 100 000 (2) ரூ. 120 000 (3) ரூ. 200 000 (4) ரூ. 240 000

**34.** வணிக நிறுவனமொன்றின் கட்டடமானது 01.07.2016 இல் காப்புறுதி செய்யப்பட்டு அதே தினத்தில் ரூ. 18 000 வருடாந்த காப்புறுதிக் கட்டணமாகச் செலுத்தப்பட்டது.
மேலே தரப்பட்ட கொடுக்கல்வாங்கல் தொடர்பில் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) 31.12.2016 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாப நட்டக் கூற்றில் குறிப்பிடப்படும் காப்புறுதிக் கட்டணம் ரூ. 18 000 ஆகும்.
(2) 31.12.2016 இல் உள்ளவாறான செலுத்த வேண்டிய காப்புறுதிக் கட்டணம் ரூ. 9 000 ஆகும்.
(3) 31.12.2016 இல் உள்ளவாறான நடைமுறைப் பொறுப்புக்கள் ரூ. 9 000 ஆகும்.
(4) 31.12.2016 இல் உள்ளவாறான முற்பணமாகச் செலுத்திய காப்புறுதிக் கட்டணம் ரூ. 9 000 ஆகும்.

● பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **35** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

நிறுதன் என்பவர் 01.01.2016 இல் ரூ. 330 000 ஈடுபடுத்தி ஆரம்பித்த வணிகத்தின் 31.12.2016 இல் முடிவடைந்த ஆண்டுக்காக, பயிலுனரான கணக்கு எழுதுவினைஞரினால் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.

**இலாப நட்டக் கூற்று**

| **வருமானம்** | **ரூ.** | **ரூ.** |
|---|---|---|
| விற்பனைகள் | 250 000 | |
| பெற்ற கழிவுகள் | 3 000 | |
| | | 253 000 |
| **செலவுகள்** | | |
| கொள்வனவுகள் | 160 000 | |
| உள்வந்த வண்டிக்கூலி | 5 000 | |
| விளம்பரப்படுத்தற் செலவுகள் | 10 000 | |
| வாடகை | 12 000 | |
| வங்கிக்கடன் வட்டி | 6 000 | |
| மின்சாரக் கட்டணங்கள் | 2 500 | |
| கொடுத்த கழிவுகள் | 1 000 | |
| | | (196 500) |
| தேறிய இலாபம் | | 56 500 |

**நிதிநிலைமைக் கூற்று**

| **சொத்துக்கள்** | **ரூ.** |
|---|---|
| மோட்டார் வாகனம் | 300 000 |
| தளபாடங்கள் | 100 000 |
| கடன்பட்டோர் | 30 000 |
| காசு மீதி | 45 000 |
| | 475 000 |
| **உரிமையாண்மையும் பொறுப்புக்களும்** | |
| மூலதனம் | 330 000 |
| தேறிய இலாபம் | 56 500 |
| வங்கிக் கடன் | 50 000 |
| கடன்கொடுத்தோர் | 36 000 |
| செலுத்தவேண்டிய வங்கிக்கடன் வட்டி | 2 500 |
| | 475 000 |

**35.** இவ்வணிகத்தின் 31.12.2016 இல் முடிவடைந்த ஆண்டுக்கான விற்ற சரக்கின் கொள்விலை
(1) ரூ. 160 000 (2) ரூ. 165 000 (3) ரூ. 196 500 (4) ரூ. 253 000

**36.** இவ்வணிகத்தின் 31.12.2016 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மொத்த இலாபம்
(1) ரூ. 85 000 (2) ரூ. 88 000 (3) ரூ. 90 000 (4) ரூ. 93 000

[பக். 6 ஐப் பார்க்க

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

**37.** இவ்வணிகத்தின் 31.12.2016 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாப நட்டக் கூற்றில் குறிப்பிடப்படும் நிலைய நிர்வாகச் செலவுகளின் மொத்தத் தொகை
(1) ரூ. 11 000 (2) ரூ. 12 000 (3) ரூ. 14 500 (4) ரூ. 31 500

**38.** இவ்வணிகத்தின் 31.12.2016 இல் முடிவடைந்த ஆண்டில் பணமாகச் செலுத்தப்பட்ட வங்கிக்கடன் வட்டி எவ்வளவு?
(1) ரூ. 2 500 (2) ரூ. 3 500 (3) ரூ. 6 000 (4) ரூ. 8 500

**39.** இவ்வணிகத்தில் 01.01.2016 இல் இருந்து 31.12.2016 வரை ஏற்பட்ட உரிமையாண்மையின் அதிகரிப்பு
(1) ரூ. 45 000 (2) ரூ. 56 500 (3) ரூ. 330 000 (4) ரூ. 386 500

**40.** இவ்வணிகத்தின் 31.12.2016 இல் உள்ளவாறு மொத்தச் சொத்துக்களின் பெறுமதியையும் மொத்தப் பொறுப்புக்களின் பெறுமதியையும் முறையே எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
(1) ரூ. 475 000, ரூ. 475 000 (2) ரூ. 386 500, ரூ. 88 500
(3) ரூ. 88 500, ரூ. 475 000 (4) ரூ. 475 000, ரூ. 88 500

* *

[பக். 7 ஐப் பார்க்க

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

60 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය I, II
வணிகக் கல்வியும் கணக்கீடும் I, II
Business and Accounting Studies I, II

## வணிகக் கல்வியும் கணக்கீடும் II

**முக்கியம் :** அறிவுறுத்தல்களுக்கமைய **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. மேலதிகமாக எழுதப்படும் விடைகள் பரீட்சார்த்தியினால் வெட்டிவிடப்படாத சந்தர்ப்பத்தில் பரீட்சகரினால் புள்ளிகள் வழங்கப்படாமல் வெட்டிவிடப்படும்.

※ **முதலாம்** வினா உட்பட, பகுதி **I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி **II** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

※ விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.

**1.** பின்வரும் சம்பவத்தைப் பயன்படுத்தி (i) தொடக்கம் (x) வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

காணிச் சொந்தக்காரரும் பயிர்ச்செய்கையாளரும் விவசாயப் பாடத்தில் பட்டத்தைப் பெற்றவருமான கோகிலன், சேதனப் பசளைகளைப் பயன்படுத்தி வாழைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுகிறார். அவர் தனது உற்பத்திப்பொருள்களைப் பிரதேசத்தின் பழங்களை விற்பனை செய்யும் சந்தைகளுக்கு விநியோகிப்பதுடன் வாராந்த சந்தைகளுக்கும் கொண்டுசென்று விற்பனை செய்கிறார்.

சூழலியலாளரான பானுகன், கோகிலனின் வணிகத்தின் கழிவுப்பொருள்களான வாழை மரத் தண்டுகளையும் வாழையிலைகளையும் கொள்வனவு செய்து, காய வைத்துப் பதனிட்டு, தயாரித்துக் கொண்ட மூலப்பொருள்களைக் கொண்டு உணவு பொதிசெய்யும் பெட்டிகளைத் தயாரித்து சிற்றுண்டிச்சாலைகளுக்கும் அலுவலக ஊழியர்களுக்கும் விற்பனை செய்கின்றார்.

பானுகன் தனது வணிகத்தை 01 ஆகஸ்ட் 2017 இல் 'பனானா லீவ்ஸ்' என்ற பெயரில் பதிவு செய்ததுடன் அத்திகதியில் உள்ளவாறான சொத்துக்கள், பொறுப்புக்கள் பின்வருமாறு:

- காசு ............................................. ரூ. 8 000
- கடன்பட்டோர் ............................................. ரூ. 5 000
- கடன்கொடுத்தோர் ............................................. ரூ. 3 000
- உற்பத்தி உபகரணங்கள் ............................................. ரூ. 40 000
- வங்கிக் கடன் ............................................. ரூ. 20 000

2017 ஆகஸ்ட் மாதத்தின்போது 'பனானா லீவ்ஸ்' வணிகத்தில் பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் நடைபெற்றன.

- வாழை இலைகள் மற்றும் வாழைமரத் தண்டுகள் கொள்வனவு - காசுக்கு ரூ. 8 000
  - கடனுக்கு ரூ. 12 000
- உணவு பொதிசெய்யும் பெட்டிகள் விற்பனை - காசுக்கு (1 000 அலகுகள்) ரூ. 20 000
  - கடனுக்கு (2 000 அலகுகள்) ரூ. 40 000
- கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசு ரூ. 35 000
- கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவு ரூ. 10 000
- ஆகஸ்ட் மாதத்தின்போது உணவு பொதிசெய்யும் பெட்டிகளைத் தயாரிப்பதற்காகச் செலுத்திய செலவுகள் வருமாறு:
  - ※ மின்சாரக் கட்டணங்கள் ........................ ரூ. 3 000
  - ※ தொழிற்சாலை வாடகை ........................ ரூ. 4 000
  - ※ போக்குவரத்துச் செலவு ........................ ரூ. 3 600
  - ※ உதவியாளர் சம்பளம் ........................ ரூ. 5 000
- உற்பத்தி உபகரணங்களுக்கு ஆகஸ்ட் மாதத்தின் தொடக்க மீதியின் மீது வருடாந்தம் 12% பெறுமானத்தேய்வு செய்யப்படுதல் வேண்டும்.
- 31 ஆகஸ்ட் 2017 இல் எதுவித இருப்பும் காணப்படவில்லை.

01 செப்ரெம்பர் 2017 இலிருந்து பொலித்தீன் பாவனையின் மீது அரசாங்கம் தடை விதித்ததன் விளைவாக 'பனானா லீவ்ஸ்' நிறுவனத்தின் உற்பத்திப்பொருள்களுக்கு கேள்வி அதிகரித்ததன் காரணமாக அதிகரித்த கேள்வியை ஈடுசெய்வதற்காக 31 ஆகஸ்ட் 2017 இல் ஊழியர் ஒருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார். மேலும் பானுகன் குத்தகை அடிப்படையில் காணியொன்றைப் பெற்றுக்கொண்டு எதிர்காலத்தில் வாழைச் செய்கையை மேற்கொண்டு வணிகத்தைத் விரிவுபடுத்தத் தீர்மானித்தார்.

[பக். 8 ஐப் பார்க்க

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

(i) (அ) 'பனானா லீவ்ஸ்' நிறுவனம் எந்த வணிக நிறுவன வகைக்கு உரித்தானதாகும் ?

(ஆ) கோகிலனின் வணிகத்தில் காணத்தக்க பலம் ஒன்றைக் குறிப்பிடுக.

(ii) கோகிலன், பானுகன் ஆகிய இருவரும் சில்லறை வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர்.

(அ) மேலே தரப்பட்ட கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா ?

(ஆ) உமது விடைக்கான காரணங்களைக் குறிப்பிடுக.

(iii) இச்சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டமிடல் கருமம், ஒழுங்கமைத்தல் கருமம் ஆகிய ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் எழுதுக.

(iv) (அ) அரசாங்கத்தினால் பொலித்தீன் பாவனையைத் தடைசெய்யும் சட்டத்தை அமுல்படுத்தியமை எந்த வகைச் சூழலுக்கு உரித்தானது ?

(ஆ) சம்பவத்திற் குறிப்பிடப்பட்டுள்ள 'பனானா லீவ்ஸ்' வணிகத்தின் அகச் சூழலுக்கு உரித்தான **இரு** தரப்பினரைக் குறிப்பிடுக.

(v) (அ) 01 ஆகஸ்ட் 2017 இல் உள்ளவாறு 'பனானா லீவ்ஸ்' வணிகத்தின் உரிமையாண்மை எவ்வளவு ?

(ஆ) 'பனானா லீவ்ஸ்' வணிகத்தினால் பேணப்படும் மூலப்பதிவேடுகள் **இரண்டைப்** பெயரிடுக.

(vi) (அ) 2017 ஆகஸ்ட் மாதத்திற்கான உற்பத்தி உபகரணத்தின் பெறுமானத் தேய்வைப் பதிவுசெய்வதற்குப் பொருத்தமான நாட்குறிப்புப் பதிவைத் தருக.

(ஆ) 31 ஆகஸ்ட் 2017 இல் உள்ளவாறு உற்பத்தி உபகரணங்களின் தேறிய பெறுமதி எவ்வளவு ?

(vii) 2017 ஆகஸ்ட் மாதத்துக்கான 'பனானா லீவ்ஸ்' வணிகத்தின் காசுக் கணக்கைத் தயாரிப்பதன் மூலம் 31 ஆகஸ்ட் 2017 இல் உள்ளவாறான காசு மீதியைக் கணிப்பிடுக.

(viii) 31 ஆகஸ்ட் 2017 இல் உள்ளவாறு 'பனானா லீவ்ஸ்' வணிகத்தின்,

(அ) நடைமுறைச் சொத்தொன்றையும்

(ஆ) நடைமுறைப் பொறுப்பொன்றையும்

பெறுமதிகளுடன் எழுதுக.

(ix) 31 ஆகஸ்ட் 2017 இல் உள்ளவாறான 'பனானா லீவ்ஸ்' வணிகத்தின் அடிப்படைக் கணக்கீட்டுச் சமன்பாட்டைப் பெறுமதிகளுடன் எழுதுக.

(x) (அ) ஆகஸ்ட் மாதத்தில் 'பனானா லீவ்ஸ்' வணிகத்தினால் தயாரிக்கப்பட்ட உணவு பொதிசெய்யும் பெட்டி ஒன்றின் கிரயம் எவ்வளவு ?

(ஆ) உணவு பொதிசெய்யும் பெட்டி ஒன்றை விற்பனை செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட இலாபம் எவ்வளவு ?

**(02 × 10 = 20 புள்ளிகள்)**

## பகுதி I - வணிகக் கல்வி

(**இரண்டு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.)

2. (i) (அ) வணிகம் என்றால் என்ன ?

(ஆ) வணிக நடவடிக்கைகள் மீது அக்கறை செலுத்தும் **இரண்டு** தரப்பினரைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுகள் **உண்மையா, பொய்யா** என்பதனைக் குறிப்பிடுக.

(அ) உயிர்வாழ்வதற்காக மனிதனால் அத்தியாவசியமாக நிறைவு செய்துகொள்ள வேண்டியவை மனிதத் தேவைகள் ஆகும்.

(ஆ) உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப்பொருள்களின் தன்மையின் அடிப்படையில் வணிகங்கள் பொது மற்றும் தனியார் வணிகங்கள் என வகைப்படுத்தப்படும்.

(இ) உற்பத்தியின்போது பயன்படுத்தப்படும், மனிதனால் தயாரிக்கப்பட்டுள்ள விடயங்கள் உற்பத்திக் காரணியான உழைப்பு ஆகும்.

(ஈ) வரையறுத்த கம்பனி ஒன்றின் பங்குதாரர்களது நட்டப் பொறுப்பானது அவர்களால் அங்கு முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தின் அளவுக்கு வரையறுக்கப்படும். (02 புள்ளிகள்)

(iii) ஸ்ரீ லங்கா ரெலிகொம் (PLC) ஊழியர்களால் அங்கு நடாத்தப்படும் 'சமகி' சிற்றுண்டிச்சாலையில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள, தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையினால் (NLDB) விநியோகிக்கப்படும் தயிருக்கு மிகவும் உயர்வான கேள்வி காணப்படுகிறது.

மேலே தரப்பட்ட சம்பவத்தில் இருந்து கீழே A, B, C, D ஆகிய ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் வீதம் எழுதுக.

A - சேவை வழங்கும் வணிகங்கள்

B - அரசாங்கத்துக்குச் சொந்தமான வணிகங்கள்

C - சங்கங்கள்

D - நலன் சார்ந்த வணிகங்கள் (02 புள்ளிகள்)

(iv) சுந்தரம் என்பவர் பதனிட்ட தோலைப் பயன்படுத்துவதன் மூலம் சப்பாத்துகளைத் தயாரித்து விற்பனை செய்யும் வணிகமொன்றை நடாத்தி வருகின்றார்.

(அ) சுந்தரத்தின் வணிகத்தின் மூலம் பூர்த்திசெய்யப்படும் அடிப்படை மனிதத் தேவை யாது?

(ஆ) சப்பாத்துத் தயாரிப்பில் பயன்படுத்தப்படுகின்ற பதனிட்ட தோல் மேலே தரப்பட்ட வணிகத்தின் உற்பத்திக் காரணியான நிலத்துக்கு உரித்தானதாகும்.

நீர் இக்கூற்றுடன் இணங்குகின்றீரா ? உமது விடைக்கான காரணங்களைத் தருக. (02 புள்ளிகள்)

**(மொத்தம் 08 புள்ளிகள்)**

[பக். 9 ஐப் பார்க்க


Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

3. (i) (அ) காசோலை என்றால் என்ன ?
(ஆ) காப்புறுதித் தத்துவங்கள் **இரண்டு** எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுகள் **உண்மையா, பொய்யா** என்பதனைக் குறிப்பிடுக.
(அ) தங்க நகைகளை அடகு பிடிப்பதில் ஈடுபடும் வங்கியானது தன்னிடம் அடகு வைக்கப்படும் நகைகளைக் காப்புறுதி செய்ய முடியும்.
(ஆ) தொடர்பாடல் செயன்முறை பூர்த்தியடைவதற்குப் பின்னூட்டல் தேவையானதல்ல.
(இ) சேமிப்புக் கணக்கில் காணப்படும் மீதியிலும் பார்க்கக் கூடுதலான தொகையை மீளப் பெறுவதற்கு வங்கியால் வழங்கப்படும் அனுமதி வங்கி மேலதிகபற்று வசதி ஆகும்.
(ஈ) ஒரு நாடு வேறொரு நாட்டில் இருந்து உற்பத்திப்பொருள்களைத் தமது நாட்டுக்குக் கொண்டுவருதல் ஏற்றுமதி வியாபாரம் எனப்படும். (02 புள்ளிகள்)

(iii) (அ) "கொழும்புத் துறைமுகத்தை விரிவுபடுத்துவதன் மூலம் வணிக நடவடிக்கைகள் வினைத்திறனானவையாகும்." மேலே கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள, போக்குவரத்துடன் நேரடியாகத் தொடர்புபடும் போக்குவரத்து அடிப்படை மூலக்கூறைப் பெயரிடுக.
(ஆ) சுமதிபால என்பவர் யாழ்ப்பாணத்திலுள்ள உருளைக்கிழங்கு உற்பத்தியாளரான இராமச்சந்திரனிடமிருந்து பாரிய அளவில் உருளைக்கிழங்குகளைக் கொள்வனவு செய்து அவற்றை வாராந்த சந்தையில் வியாபாரத்தில் ஈடுபடும் பியாலுக்கும் தனது வீட்டின் முன்பகுதியில் காய்கறிகளை விற்பனை செய்யும் சுமணாவுக்கும் விற்பனை செய்கின்றார்.
மேலே தரப்பட்ட சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு மொத்த வியாபாரியையும் ஒரு சில்லறை வியாபாரியையும் ஒழுங்குமுறையில் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(iv) புடைவை வணிகத்தில் ஈடுபடும் தரங்க பெரேரா என்பவர் 01.10.2017 இல் காமினி சில்வா என்பவரிடமிருந்து புடைவைகளைக் கொள்வனவு செய்து ரூ. 8 500 இற்கு காசோலை ஒன்றை வழங்கினார். காசோலையொன்றின் மாதிரி வடிவம் கீழே தரப்படுகிறது.




(அ) மேலே தரப்பட்டுள்ள காசோலை மாதிரியில் Ⓐ, Ⓑ, Ⓒ, Ⓓ ஆகிய இடங்களில் எழுதப்பட வேண்டிய தகவல்களை மேலே சம்பவத்திலிருந்து தெரிவுசெய்து எழுதுக.
(ஆ) மேலே தரப்பட்ட காசோலையின் வரைபவர், பணம் செலுத்துபவர் ஆகியோரைத் தனித்தனியாகக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**(மொத்தம் 08 புள்ளிகள்)**

4. (i) (அ) இலக்குச் சந்தை என்றால் என்ன ?
(ஆ) திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய **இரண்டு** அனுகூலங்களை எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுகள் **உண்மையா, பொய்யா** என்பதனைக் குறிப்பிடுக.
(அ) பங்குச் சந்தை நடவடிக்கைகளை முறையாகவும் நியாயமாகவும் நடாத்திச் செல்லல் இலங்கை பிணைகள் பரிமாற்று ஆணைக்குழுவின் பிரதான நோக்கமாகும்.
(ஆ) முதலீடு ஒன்றின் இடரானது அதிகரிக்கும்போது அதன் எதிர்பார்க்கப்பட்ட திரும்பலும் அதிகரிக்கும்.
(இ) உற்பத்திப்பொருளொன்றை வடிவமைப்பதிலிருந்து அதனை வாடிக்கையாளருக்குக் கிடைக்கச் செய்வது வரையான செயன்முறை மட்டுமே சந்தைப்படுத்தல் ஆகும்.
(ஈ) வரையறுத்த வளங்களை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு வணிகமொன்றிற்கு முகாமைத்துவம் அவசியமானதாகவுள்ளது. (02 புள்ளிகள்)

(iii) வணிகமொன்றின் சந்தைப்படுத்தல் முகாமையாளரால் மேற்கொள்ளப்பட்ட நான்கு நடவடிக்கைகள் பின்வருமாறு:
A - உற்பத்திப்பொருள்களை விநியோகிப்பதற்காக வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்தல்
B - தற்போதைய உற்பத்திப்பொருளின் தன்மையை மாற்றுவதற்குத் தீர்மானித்தல்
C - வாடிக்கையாளர்களுடன் சிறந்த உறவைப் பேணுமாறு விற்பனை ஊழியர்களுக்கு அறிவுரை வழங்குதல்
D - பிரேரிக்கப்பட்ட கழிவு வழங்கல் நடவடிக்கையை அமுல்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட விற்பனை வருமானம் உழைக்கப்பட்டதா என்பதனைப் பரிசீலித்தல்

மேலே தரப்பட்ட ஒவ்வொரு நடவடிக்கையும் எந்த முகாமைத்துவக் கருமத்துக்குரித்தானது என்பதனையும் சந்தைப்படுத்தல் கலவையில் எந்த மாறிக்குரித்தானது என்பதனையும் வெவ்வேறாகக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

[பக். 10 ஐப் பார்க்க

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

(iv) எதிர்வரும் மாதத்தில் இளைப்பாற எதிர்பார்த்துள்ளவரும் அதிக இடர்களை ஏற்றுக்கொள்ள விரும்பாதவருமான பரதன் தனது ஊழியர் சேமலாப நிதியிலிருந்து கிடைக்கவுள்ள பணத்தை முதலீடு செய்வதற்காகப் பின்வரும் இரண்டு வகையான முதலீட்டு வழிமுறைகளைக் கவனத்திற் கொண்டுள்ளார்.

1. வருடாந்தம் 15% வட்டி வீதத்தைக் கொண்ட சிரேஷ்ட பிரஜைகள் நிலையான வைப்புக் கணக்கில் முதலீடு செய்தல்
2. பங்குச்சந்தையில் வருடாந்தம் 25% எதிர்பார்க்கப்பட்ட திரும்பலைக் கொண்ட சாதாரண பங்குகளில் முதலீடு செய்தல்

(அ) மேலே தரப்பட்ட முதலீடுகளில் பரதன் முதலீடு செய்வதற்கு நீர் எதனை சிபாரிசு செய்வீர் ?

(ஆ) நீர் மேற்குறித்த முதலீட்டு வழிமுறையைத் தெரிவுசெய்தமைக்கான காரணங்களைத் தருக. (02 புள்ளிகள்)

**(மொத்தம் 08 புள்ளிகள்)**

## பகுதி II - கணக்கீடு

(**இரண்டு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.)

**5.** (i) (அ) பொறுப்பு என்றால் என்ன ?

(ஆ) பேரேட்டில் காணத்தக்க **இரண்டு** வகையான கணக்குகளை எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கொடுக்கல்வாங்கல்களுக்கான இரட்டைப் பதிவை எழுதுக.

(அ) உடைமையாளர் தனது சொந்தத் தேவைக்காக ரூ. 2 000 பணம் மீளப் பெறுதல்

(ஆ) வணிகத்தின் பயன்பாட்டுக்காக ஓட்டோ ரேடேர்ஸ் நிறுவனத்திடமிருந்து ரூ. 500 000 பெறுமதியான மோட்டார் வாகனத்தைக் கடனுக்குக் கொள்வனவு செய்தல் (02 புள்ளிகள்)

(iii) வணிகமொன்றில் 01.01.2017 இல் காணப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள், உரிமையாண்மை தொடர்பான மீதிகளும் கணக்கீட்டுச் சமன்பாட்டைப் பயன்படுத்தி ஜனவரி முதல் வாரத்தில் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல்கள் பதிவுசெய்யப்பட்டிருந்த விதமும் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | | சொத்துக்கள் (ரூ.) | = | உரிமையாண்மை (ரூ.) | + | பொறுப்புக்கள் (ரூ.) |
|---|---|---|---|---|---|---|
| 01.01.2017 | மீதி | 200 000 | = | 150 000 | | 50 000 |
| | (1) | + 25 000 (காசு) | = | – | | + 25 000 (வங்கிக் கடன்) |
| | (2) | – 10 000 (சரக்கிருப்பு)<br>+ 15 000 (கடன்பட்டோர்) | = | + 5 000 (இலாபம்) | | – |
| | (3) | – 7 000 (காசு) | = | – 7 000 (வாடகை) | | – |
| | (4) | – 6 000 (காசு) | = | – | | – 6 000 (கடன்கொடுத்தோர்) |

**வேண்டப்படுவது:**

(அ) மேலே நிகழ்ந்த கொடுக்கல்வாங்கல் ஒவ்வொன்றையும் பெறுமதியுடன் எழுதுக.

(ஆ) வாரத்தில் மொத்தச் சொத்துக்களினதும் மொத்த உரிமையாண்மையினதும் அதிகரித்தல் அல்லது குறைதலைத் தனித்தனியாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) 2017 மே மாதத்திற்காக வணிகமொன்றினால் தயாரிக்கப்பட்ட கொள்வனவு நாளேடும் விற்பனை நாளேடும் கீழே தரப்படுகிறது.

**கொள்வனவு நாளேடு**

| திகதி | பட்டியல் இல. | வழங்குநர் | மொத்தத் தொகை (ரூ.) | பே.ப |
|---|---|---|---|---|
| 5/10 | 005 | நாலகன் | 4 800 | |
| 5/18 | 1008 | வாசனா | 15 000 | |

**விற்பனை நாளேடு**

| திகதி | பட்டியல் இல. | கொள்வனவாளர் | மொத்தத் தொகை (ரூ.) | பே.ப |
|---|---|---|---|---|
| 5/12 | 326 | மதனியா | 6 200 | |
| 5/26 | 327 | விமலா | 3 000 | |

**வேண்டப்படுவது:**

(அ) 31 மே 2017 மாதத்தில் உள்ளவாறு மேலேயுள்ள கொள்வனவு நாளேட்டையும் விற்பனை நாளேட்டையும் பூர்த்திசெய்க.

(ஆ) மேலேயுள்ள கொள்வனவு நாளேடு மற்றும் விற்பனை நாளேட்டில் காணப்படும் கொடுக்கல்வாங்கல்களை பேரேட்டுக் கணக்குகளில் பதிவுசெய்க. (04 புள்ளிகள்)

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

[பக். 11 ஐப் பார்க்க

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

6. (i) (அ) உற்பத்திக் கிரயத்தின் மூலக்கூறுகளைப் பெயரிடுக.

(ஆ) கணக்கீட்டுத் தவறுகள் நிகழக்கூடிய **இரண்டு** சந்தர்ப்பங்களை எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) அச்சுக் கற்களைத் தயாரிக்கும் சக்தி வணிகத்தின் 2017 ஆகஸ்ட் மாதத்திற்கான சில தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| ※ அச்சுக் கல் ஒன்றுக்கான கிரயம் | ரூ. | 30 |
| ※ உற்பத்தி மேந்தலைக் கிரயம் | ரூ. | 20 000 |
| ※ மொத்த உற்பத்திக் கிரயம் | ரூ. | 60 000 |
| ※ நேர் மூலப்பொருள் கிரயம் | ரூ. | 15 000 |
| ※ ஏனைய நேர் செலவுகள் | ரூ. | 10 000 |

**வேண்டப்படுவது:**

(அ) ஆகஸ்ட் மாதத்தில் தயாரிக்கப்பட்ட அச்சுக் கற்களின் எண்ணிக்கை

(ஆ) ஆகஸ்ட் மாதத்திற்கான நேர் ஊழியக் கிரயம் (02 புள்ளிகள்)

(iii) கணக்கீட்டில் நிகழ்ந்த சில தவறுகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - கடன் விற்பனை ரூ. 4 500 ஆனது விற்பனை நாளேட்டில் ரூ. 5 400 எனப் பதியப்பட்டுள்ளது.

B - செலுத்திய இறைக் கட்டணங்கள் ரூ. 1 200 காசுக் கணக்கில் மட்டும் பதியப்பட்டுள்ளது.

C - மின்சாரச் செலவுகள் கணக்கு மீதி ரூ. 8 000 பரீட்சை மீதிக்கு எடுக்கப்படவில்லை.

D - கொள்வனவுப் பட்டியல் ரூ. 6 000 முற்றுமுழுதாக ஏடுகளில் இருந்து விடப்பட்டுள்ளது.

E - செலுத்திய காப்புறுதி ரூ. 2 500 இறைக் கட்டணக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

F - கொடுத்த கழிவு ரூ. 1 300 ஆனது உரிய கடன்பட்டோர் கணக்கில் ரூ. 3 100 எனப் பதியப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது:**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தவறுகளுள்,

(அ) பரீட்சை மீதி சமப்படுவதில் தாக்கத்தை ஏற்படுத்தாத வழுக்கள்

(ஆ) பரீட்சை மீதி சமப்படுவதில் தாக்கத்தை ஏற்படுத்தும் வழுக்கள்

ஆகியவற்றைத் தனித்தனியே எழுதுக. (02 புள்ளிகள்)

(iv) 2017 செப்தெம்பர் மாதத்திற்காக வணிகமொன்றினால் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கும் வங்கியினால் அனுப்பப்பட்ட வங்கிக் கூற்றும் கீழே தரப்பட்டுள்ளன.

**வங்கிக் கணக்கு**

| திகதி | ப.சீ.இ. | விபரம் | பே. ப. | தொகை (ரூ.) | திகதி | கொ.உ. சீ.இ. | விபரம் | பே. ப. | தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 9/01 | | மீதி | | 18 500 | 9/07 | | கடன்கொடுத்தோர் 667615 | | 3 000 |
| 9/10 | | காசோலை வைப்பு 562518 | | 9 000 | 9/10 | | வாடகை 667616 | | 4 000 |
| 9/22 | | காசோலை வைப்பு 336215 | | 16 000 | 9/28 | | கொள்வனவுகள் 667617 | | 20 000 |
| | | | | | 9/30 | | மீ.கீ.கொ.செ. | | 16 500 |
| | | | | 43 500 | | | | | 43 500 |

**வங்கிக் கூற்று**

| திகதி | விபரம் | வரவு (ரூ.) | செலவு (ரூ.) | மீதி (ரூ.) |
|---|---|---|---|---|
| 9/1 | மீதி | | | 18 500 |
| 9/8 | 667615 | 3 000 | | 15 500 |
| 9/11 | காசோலை வைப்பு 562518 | | 9 000 | 24 500 |
| 9/12 | 667616 | 4 000 | | 20 500 |
| 9/25 | நேரடி வைப்புகள் | | 8 000 | 28 500 |
| 9/30 | நிலையியற் கட்டளை (காப்புறுதி) | 5 000 | | 23 500 |

**வேண்டப்படுவது:**

(அ) 30.09.2017 இல் உள்ளவாறு வங்கிக் கணக்கிலுள்ள மீதியைத் திருத்துதல்

(ஆ) 30.09.2017 இல் உள்ளவாறான வங்கிக் கணக்கு இணக்கக்கூற்று (06 புள்ளிகள்)

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

[பக். 12 ஐப் பார்க்க

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

7. (i) (அ) வியாபாரக் கணக்கைத் தயாரிப்பதன் நோக்கம் யாது ?

(ஆ) செலுத்த வேண்டிய செலவுகளைப் பதிவதற்குப் பொருத்தமான இரட்டைப் பதிவை எழுதுக.

(02 புள்ளிகள்)

(ii) 2016 ஆம் ஆண்டில் முத்தம்மா விளையாட்டுக் கழகத்தின் அங்கத்தவர் எண்ணிக்கை 100 ஆகக் காணப்பட்டதுடன் ஓர் அங்கத்தவருக்கான வருடாந்த அங்கத்துவக் கட்டணம் ரூ. 100 ஆகும்.

2016 ஆம் ஆண்டுக்குத் தயாரிக்கப்பட்ட பெறுவனவு, கொடுப்பனவு கணக்கு கீழே தரப்பட்டுள்ளது.

**பெறுவனவு, கொடுப்பனவு கணக்கு**

| | | | | |
|---|---|---|---|---|
| 1/1 | மீதி | 12 000 | விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு | 8 000 |
| | அங்கத்துவக் கட்டணம் | 7 000 | பார்வையாளர் அரங்குக்கான செலவு | 3 000 |
| | | | விளையாட்டு ஆலோசகர் கட்டணம் | 5 000 |
| | | | 12/31 மீதி.கீ.கொ.செ. | 3 000 |
| | | 19 000 | | 19 000 |

**வேண்டப்படுவது:**

31.12.2016 இல் முடிவடைந்த ஆண்டுக்கான முத்தம்மா விளையாட்டுக் கழகத்தின் வருமானக் கூற்று

(02 புள்ளிகள்)

(iii) 31.12.2016 இல் உள்ளவாறான ஜனனி வணிகத்தின் பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது.

| | வரவு (ரூ.) | செலவு (ரூ.) |
|---|---|---|
| மூலதனம் | | 200 000 |
| விநியோக வான் (கிரயத்தில்) | 250 000 | |
| பெறுமானத்தேய்வு ஏற்பாடு விநியோக வான் (01.01.2016 இல் உள்ளவாறு) | | 30 000 |
| சரக்கிருப்பு (01.01.2016 இல் உள்ளவாறு) | 35 000 | |
| 12% வங்கிக் கடன் | | 50 000 |
| காப்புறுதிக் கட்டணம் | 12 000 | |
| விற்பனைகள் | | 220 000 |
| கொள்வனவுகள் | 170 000 | |
| கடன்பட்டோர் | 30 000 | |
| கடன்கொடுத்தோர் | | 40 000 |
| பெற்ற கழிவுகள் | | 4 000 |
| கொடுத்த கழிவுகள் | 2 500 | |
| வங்கிக் கடன் வட்டி | 4 000 | |
| அறவிடமுடியாக் கடன்கள் | 1 000 | |
| மின்சாரக் கட்டணங்கள் | 1 500 | |
| இறைக் கட்டணங்கள் | 2 000 | |
| நிர்வாகச் செலவுகள் | 6 000 | |
| காசு மீதி | 30 000 | |
| | 544 000 | 544 000 |

மேலதிக தகவல்கள்:

* 31.12.2016 இல் உள்ளவாறான சரக்கிருப்பு ரூ. 28 000 ஆகும்.
* விநியோக வாகனங்களுக்கு நேர்கோட்டு முறையில் வருடாந்தம் 10% பெறுமானத்தேய்வு செய்யப்படுதல் வேண்டும்.
* 31.12.2016 இல் முற்பணமாகச் செலுத்திய காப்புறுதி ரூ. 2 000 ஆகும்.

**வேண்டப்படுவது:**

(அ) 31.12.2016 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாப நட்டக் கூற்று (04 புள்ளிகள்)

(ஆ) 31.12.2016 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று (04 புள்ளிகள்)

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

* * *

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/